# வ. உ. சிதம்பரம் பிள்ளை

"நாம் எல்லோரும் பலமாக மூச்சுவிட்டால் போதுமே! அம்மூச்சுக் காற்றில் பறந்துபோகாதா வெள்ளையர் ஆதிக்கம்?" **வ. உ. சி**

**ஆக்கம்**

**கோ.ஸ்ரீராம்**

| | |
|---|---|
| பெயர் | வ.உ.சிதம்பரம்பிள்ளை |
| பிறப்பு | 05.09.1872<br>வண்டானம் ஒட்டப்பிடாரம் அருகில்<br>தூத்துக்குடிமாவட்டம் |
| சிறப்பு பெயர்கள் | 1. வ.உ.சி.<br>2. கப்பல் ஒட்டிய தமிழன்<br>3. செக்கிழுத்த செம்மல்<br>4. வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷத்தின் பிதா<br>5. 'தமிழ் ஹெல்ம்ஸ்மேன்'<br>6. 'கப்பல் செலுத்துகிற திசையைக் காட்டுபவர்' |
| நிறுவனம் | சுதேசிநீராவிகப்பல்நிறுவனம் (1906 அக்டோபர் 16) |
| தொழில் | வழக்கறிஞர் |
| இறப்பு | 18.11.1936 |

1. **வ. உ.சி** என்றழைக்கப்படும் **வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம்பிள்ளை** வ.உ.சி. 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் நாள் தமிழ் நாட்டில் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் உலகநாத பிள்ளை, பரமாயி அம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாகப் பிறந்தார்
2. சட்டத் தேர்வை 1894-ஆம் ஆண்டு எழுதித் தேர்ச்சி பெற்றார். 1895ல் ஒட்டப்பிடாரத்தில் வழக்கறிஞர் தொழிலைத் துவங்கினார்.

   **வ.உ.சி. தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும்**

   - "சுதேசி பிரச்சார சபை",
   - "தர்ம சங்க நெசவு சாலை",
   - "தூத்துக்குடி கைத்தொழில் சங்கம்",
   - "சுதேசிய பண்டக சாலை",
   - "வேளாண் சங்கம்" போன்றவற்றை ஏற்படுத்தினார்.
3. திருநெல்வேலியிலுள்ள ‘கோரல் மில்ஸ்’ தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்றார். ஆங்கிலேய அதிகாரிகள் ஏற்கனவே அவர் மீது கொண்ட வெறுப்பினால், இச்செயலை அரசாங்கத்திற்கு எதிரான துரோகம் என்று குற்றம் சாட்டி
4. 1908 **ஜூலை** 7**ஆம் நாள்** ஏ.எஃப். பின்ஹே என்ற நீதிபதி வ.உ.சி-க்கு இரட்டை ஆயுள் தண்டனை அளித்தார்.
5. தனக்கு விதிக்கப்பட்ட 40 ஆண்டுகள் ஆயுள் தண்டனையை ரத்து செய்யக் கோரி வ.உ.சி. சென்னை உயர்நீதிமன் றத்தில் மேல் முறையீடு செய்தார். தீர்ப்பில் ஆயுள் தண்டனை 6 ஆண்டுக் கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.
6. வ.உ.சி. சிறை வாழ்வில் பட்ட துன்பங்கள் பற்றிய தகவல்களை ‘துன்பம் சகியான்’ என்ற புனைபெயரில் பாரதியின் ‘இந்தியா’ பத்திரிகைக்கு முதன்முதலாக அனுப்பிவைத்தார் நெல்லையப்பர்.
7. கோயம்புத்தூர் மற்றும் கண்ணனூர் சிறைகளில் தாங்கொணாத் துன்பங் களை அனுபவித்து விட்டு 1912 டிசம்பர் மாதம் கண்ணனூர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

**சுதேசிக் கப்பல் நிறுவனம் (1906 அக்டோபர் 16 )**

1. தூத்துக் குடி நகருக்கும் இலங்கைக்கும் இடையே ஆங்கிலேயருக்குச் சொந்தமான பிரிட் டிஷ் இந்தியா ஸ்டீம் நேவிகேஷன் என்ற நிறுவனத்தின் கப்பல்களே வணிகப் போக்குவரத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்தன.
2. ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை ஒழிக்க எண்ணிய வ.உ.சி. 1906 அக்டோபர் 16ஆம் நாள் சுதேசிக் கப்பல் நிறுவ னத்தைப் பதிவு செய்தார்.
3. நிறுவனத்தின் தலைவராகப் பாண்டித்துரைத் தேவரும், வ.உ.சி. செயலராகவும் பதவி ஏற்றுக் கொண்டனர்.
4. 1907 சூன் மாதம் முதல் தூத்துக்குடிக்கும், கொழும்பிற்கும் இடையே பயணக் கப்பல்கள் ஓடத் தொடங்கின.
5. காலிபா லாவோ என்ற இரு கப்பல்கள் சொந்தமாக வாங்கப்பட்டன.

**தமிழ்ப் பணி**

1. பல துயரங்களுக்கிடையே வ.உ.சி-யை மனதளவில் ஆசுவாசப்படுத்தியது தமிழ்ப் பணிதான். மதுரை பிரமானந்த சுவாமிகள் மடத்தில், சோமசுந்தர சுவாமி களிடத்தில் வ.உ.சி. ‘கைவல்ய நவநீதம்’ பயின்றார்.
2. ‘சிவஞான போத’த்துக்கு வேதாந்த அடிப்படையில் உரை எழுதினார். சைவதீட்சை பெறாத வ.உ.சி. மெய்கண்டார் அருளிய ‘சிவஞான போத’த்தின் உரையை சைவ சமயத்தினர் மறுத்தனர்.
3. வ.உ.சி-யின் அன்புக்குப் பாத்திரமான சகஜானந்தர் வ.உ.சி-யின் நூல்களுக்குச் சிறப்புப் பாயிரம் எழுதியுள்ளார். ஜேம்ஸ் ஆலனின் ‘மனம் போல் வாழ்வு’, ‘அகமே புறம்’, ‘வலிமைக்கு மார்க்கம்’ போன்ற நூல்களை வ.உ.சி. மொழிபெயர்த்துள்ளார்.
4. திருக்குறள் - மணக்குடவர் உரையை அவர் பதிப்பித்தார்.
5. திருக்குறள் நீதிக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட மெய்யறம், சுயசரிதைப் படைப்பிலக்கியமும் படைத்துள்ளார்.

**நூல்கள்**

வ.உ.சி. இயற்றிய நான்கு நூல்களுமே கவிதைகளால் ஆனவைதான். அவை

1.மெய்யறம் 2.மெய்யறிவு 3.பாடல் திரட்டு 4.சுயசரிதை

**உரை எழுதிய நூல்கள்**

வ.உ.சி. இன்னிலை, சிவஞான போதம், திருக்குறள் ஆகிய நூல்களுக்கு உரை எழுதி உள்ளார்.

**வ.உ.சி. யால் பதிப்பிக்கப்பட்ட நூல்கள்**

- 1.திருக்குறள் (மணக்குடவர் உரையுடன்)-1917
- 2.தொல்காப்பியம் (இளம்பூரனார் உரையுடன்)-1928

வ.உ.சி.4 நூல்களை மொழிபெயர்த்துள்ளார். அவையனைத்தும் ஜேம்ஸ் ஆலன் என்பவரால் எழுதப்பட்டது.

1. ஜேம்ஸ் ஆலனின் "As a man Thinketh"
2. "Out from the heart"
3. "From Poverty to Power"
4. "The way to peace"

- செப்டம்பர் 5, 1972, அவரது நூற்றாண்டு விழாவை நினைவுக்ப்ப்ரும் வகையில், இந்திய தபால் மற்றும் தந்தித்தொடர்புத் துறை ஒரு சிறப்பு தபால்தலையை அவரின் பெயரில் வெளியிட்டது.
- தூத்துக்குடி துறைமுகம் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் என்று பெயரிடப்பட்டுள்ளது.